முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

# ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

## எதிர்காலம் குறித்த

## இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

**பிலவ வருடம் புரட்டாசி மாதம் 31ம் திகதி முதல் ஐப்பசி மாதம் 7ம் திகதி வரை (17.10.2021 ஞாயிறு முதல் 24.10.2021 ஞாயிறு வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. அறம் வேலிகொண்ட அரங்கா
அண்ணலாக வந்த தேசிகா
வரம்பெற்று இந்தியா தமிழகத்தின்
வருங்கால பலன்குறித்த ஆசிகேட்க
2. கேட்கவே அகத்தியன் யானும்
குறைவிலா பிலவதரிவை திங்கள் முப்பானோர் திகதிமேல்
திட்டமுடன் துலைதிங்கள் சப்தம திகதிவரை
தேசமதில் நிகழ்வாக வார ஆசிதனை உரைப்பேன்
3. உரைக்கவே இந்திய ஆளுமை
உணவைதரும் கழனித்துறையில்
கரைபடியாத வண்ணம் செயல்
காக்கும் முகமாக இருந்திடவே
4. இருந்திடவே வரவேற்பு பெருகி
எங்கும் எதிர்ப்பில்லா வண்ணம்
வருந்தவிலா இசைவு பெருகி
வளர்ச்சித் திட்டங்களாக மாறும்
5. மாறுதல் காணாத நிலையில்
மக்கள் ஆதரவு கிட்டும் வரை
மாறுதலை ஏற்கும்படிச் செய்து
மத்தியும் செயல்படவே வெற்றி
6. வெற்றி கழனித்துறை வகை
விரைந்து கண்டு முடிவுறும்
ஆற்றலென எதிர்மறைபட நடந்து
ஆளுமை காலம் கடத்தினால்
7. கடத்தினால் அரசின் கடமைகள்
காக்கும் உரிமைகள் யாவும் தவறி
இடரே தேசத்தில் மிஞ்சும்
இயலாமை தொடர நேரும்

8. நேருமைபட இந்திய தமிழக
நிர்வாகத் தலைமைகள் தானும்
தருமவழி மக்களை நோக்கி
தயவான நிலைக்கு இறங்கி
9. இறங்கி கழனித்துறை காத்து
ஏனையத் துறை வளர்ச்சிக்கும்
அறம்பட செயல்வேகம் காண
அனைத்து வகையிலும் தேறி
10. தேறியே இந்தியா தமிழகம்
தேக்கமின்றி தொழில் வளர்ச்சி
வறுமைவென்று வளங்கள் கூடி
வல்லமைபெறும் ஞான ஆட்சிக் காலமாக
11. ஆகவே மாற்றம் காண
ஆறுமுக அரங்கஞானி காட்டும்
யோகஞான தவதரும வழிவர
உலகே வியக்க நிலைகள் மாறும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

பிலவ வருடம் புரட்டாசி மாதம் 31ம் நாள் 17.10.2021 ஞாயிற்றுக் கிழமை முதல் ஐப்பசி மாதம் 7ம் நாள் 24.10.2021 ஞாயிற்றுக் கிழமை முடிய உள்ள காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகள் :

ஆற்றல் மிக்க அறத்தினையே வேலியாக தர்மத்தின் பாதுகாப்பை பெற்ற ஆறுமுக அரங்க மகா தேசிகனே எல்லையில்லாத வரங்களை பெற்ற மகா ஞானியே தாம் இந்தியா தமிழகத்தில் வருங்கால பலன் குறித்து கேட்டிட அகத்திய மகரிஷி யானும் குறைவின்றி பிலவ வருடம் புரட்டாசி மாதம் 31ம் நாள் 17.10.2021 ஞாயிற்றுக் கிழமை முதல் ஐப்பசி மாதம் 7ம் நாள் 24.10.2021 ஞாயிற்றுக் கிழமை வரை உள்ள நிகழ்வுகளை வார ஆசி நூலாக அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

நாட்டு மக்களின் பசியைப் போக்கும் உணவை உற்பத்தி செய்கின்ற விவசாய துறை தூய்மையுடனும் தயவுடனும் நடந்து மக்களை காக்கும் விதமாக செயல்பட்டால் மக்களிடம் அரசுக்கு வரவேற்பு பெருகி அரசுடன் மக்களுக்கு உண்டான இணக்கமும் பெருகி எதிர்ப்பு இல்லாதவாறு மக்கள் செயல்படுவர் அதனால் அரசு வகுக்கும் திட்டங்கள் வளர்ச்சி திட்டங்களாக மாற்றம் பெறும்.

மாறுதல் அடையும் வரையிலும் அரசின் வளர்ச்சி திட்டங்களுக்கு மக்களின் ஆதரவு கிடைக்கும் வரையிலும் தொடர்ந்து செயல்பட்டு திட்டங்களை மக்கள் ஏற்கும்படி செய்து செயல்பட வெற்றி உண்டாகும்.

அதை விடுத்து உடனடியாக திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என முனைப்புடன் செயல்பட்டு மக்களுக்கு எதிராக அரசு செயல்பட்டு விவசாய மக்களின் ஆதரவை பெறாமல் காலம் கடத்தினால் மக்களை காக்கின்ற கடமையில் இருந்து தவறி இந்த தேசம் முழுதும் துன்பமே உண்டாகும்.

ஆகவே நேர்மையுடன் இந்திய தமிழக நிர்வாக தலைமைகள் எல்லாம் மக்களை நோக்கி தர்மவழியில் சென்று தயவுடன் நடந்து விவசாயத்தை காப்பாற்றி செயல்படுவதுடன் நாட்டின் மற்ற துறை வளர்ச்சிக்கும் அறத்தின் வழியில் சென்று செயல்பட எல்லா வகையிலும் அனைத்து துறைகளிலும் முன்னேற்றம் உண்டாகிடும். இந்தியா தமிழகம் தடைகள் ஏதும் இல்லாமல் விரைந்து வளர்ச்சி அடைந்து நாட்டில் நிலவும் பொருளாதார இறக்கம் சரியாகி பொருளாதார முன்னேற்றம் உண்டாவதுடன் மக்களிடம் நிலவும் வறுமை சூழலும் மாற்றமடைந்து வளங்கள் பெருகி இயற்கையின் ஒத்துழைப்பும் பெருகி நாட்டில் வல்லமையான ஞான ஆட்சி உண்டாகும். ஆகவே இவ்விதமான நல்ல மாற்றங்கள் நாட்டினில் உண்டாக வேண்டுமெனில் நாட்டு மக்கள் ஆறுமுக அரங்க மகா தேசிகனார் காட்டும் தயவே அடிப்படையாகக் கொண்ட யோக ஞான தவ தரும நெறிமுறைகளை சுத்த சன்மார்க்க நெறிகளை ஏற்று தர்மங்களை செய்து வர உலகமே வியக்குமாறு நாட்டின் நிலையும் நாட்டு மக்களின் நிலையும் உயர்வடையும் எனக்கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–